உ

சிவமயம்



உசன் விடத்தற்பளையை சேர்ந்த
காலஞ்சென்ற
கந்தையா அருணாசலத்தின்
மனைவி

**திருமதி. சரஸ்வதி அருணாசலம் அவர்கள்**

சிவபதமடைந்தமை குறித்த

# நினைவுச் சுடர்

ஸ்ரீமுக வருஷம் பங்குனி மாதம் 2ம் நாள்

**15 - 3 - 1994**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

## சமர்ப்பணம்

எல்லையில்லா அருண் மலி அண்ணல்
தில்லைக் கூத்தன் திருவடி தமக்கே
மாண்புடை சரஸ்வதி நினைவு சொன்மாலை
நான் மலராகுக நன் கனஞ் சிறந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமதி. சரஸ்வதி அருணாசலம்

மலர்வு
06.01.1929

உதிர்வு
13.02.1994

### திதி வெண்பா

மன்னு ஸ்ரீமுக மாசியாம் ஞாயிறொன்றில்
துன்னு பூர்வ பக்கத் திருதியையாம் தொல்திதியில்
பெண்ணமுதக்கற்பரசி பேரார் சரஸ்வதி
கண்ணுதலான் தாழ்சேர்ந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# காலஞ் சென்ற திருமதி சரஸ்வதி அருணாசலம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழத்திரு நாட்டை சிவபூமி என்று, பெருமுனிவர் திருமூலர் திருவாய் மலந்தருளினார். இந்நாட்டிலே வடமாகாணமாம் யாழ்நாட்டிலே, தென்மராட்சியாம் ஒரு பகுதியிலே பெரியார்கள் வாழ்ந்த சிற்றூராம் உசன்பதியிலே, வேளாண்குலத்திலே உயர் குடியிலே, தாமோதரம்பிள்ளைக்கும் அமுதுப்பிள்ளைக்கும் அரும் பெரும் புதல்வியாய் உதித்தார் சரஸ்வதி அம்மா. இவர் அமைதியின் தோற்றம் ஆற்றிலின் இன்பம் பொறுமையின் புகழிடம். இறையோடு இசைந்த இன்பம், இரப்போர்க்கு ஈயும் அன்பு, செவ்வொளி பொருந்தும் தோற்றம், இவை அனைத்தும் கூடிய சுகபாவம் உற்றவர் சரஷ்வதி அம்மா. இவர் உசன் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்றார். இவருடன் அமரர் இராமநாதன், இளைப்பாறிய கிராம சேவகர் இராசகுலசிங்கம், அமரர் செல்வரட்ணம், வயித்திலிங்கம் என்னும் நால்வருடன் சகோதரியாய் இணைந்தாள், சரஸ்வதி அம்மா . இவர் மங்கைப் பருவம் அடைந்ததும் பல்வகை வளம் மிகுந்த பெருமைகள் மிக்க அயலூராம் விடத்தற்பளையில் சீர்மிகு பெருங்குடி மகனாம் கந்தையா அருணாசலத்தினை பெரியோர்கள் நிச்சயப்படி வேத முறையான சுபவேளையில் வதுவை செய்து இல்லறத்தை நல்லறமாகச் சுகம் கண்ட மங்கை நல்லாள், சொல்லற்கரும் தவம் இயற்றி சொரிந்து நின்ற பக்தியினால் ஆறிரண்டு செல்வங்களை பெற்றெடுத்து மோகனமாய் வாழ்வினிலே மலர்ந்த ஒரு மங்கை சரஸ்வதி எனும் நங்கை. தங்கள் மக்கட் செல்வங்களை நெறிப்பட வளர்த்து வரும் நாளிலே, இவரின் கணவர் அருணாசலம் நடுவயதிலே அமரரானார். அவரின் ஆத்ம சாந்திக்கான கிரிகைகளை செய்யும் நோக்குடன் சைவம் தழைத்தோங்கும் பாரத நாட்டில் செய்ய விருப்புற்று, யாத்திரை மேற்கொண்டார். அங்கு பல புண்ணிய தலங்களான சிதம்பரம், ஆறுபடைவீடு, புண்ணிய இடமான காசி, பகவான் சாயி பாபாவின் தரிசனம் காண பெங்களூரில் உள்ள புட்டபர்த்தி போன்ற பல தலங்களை தரிசித்து ஆறுமாத கால யாத்திரையின் பின், இலங்கையை வந்தடைந்தார். இங்கும் கதிர்காமம், கோணேஸ்வரம், திருக்கேதிஸ்வரம், முனிஸ்வரம் போன்ற புகழ் படைத்த தலங்களை தரிசித்த மங்கை தான் சரஸ்வதி அம்மா. அதன்பின் தந்தையும், தாயுமாக, பிள்ளைகளின் பொறுப்பை செவ்வனே நடாத்தி மதிப்பு மிக்க தொழில் வளங்களைக் காட்டும் வண்ணம் நானிலம் புகழும் மூத்த மகனாம் ஜெகநாதன் (V.M.S. யாழ் - கொழும்பு நல்லாசிரியனாம் அமரர் ஜெகராசா (உசன். இராமநாதன்) ஆசிரியை ஜெகசோதி (விடத்தற்பளை கமலாசனி) ஜெகதீஸ்வரன் (கனடா) ஜெகபாலேந்திரா (இந்தியா), ஜெகபூவறஞ்சிதம், ஜெகசீலன் (பிரான்ஸ்) ஜெகதீசன் (டென்மார்க்) ஜெகஜெயந்திமாலா, ஜெகதா, ஜெகறட்ஷன் (லண்டன்) ஜெகதாரணியைச் செல்லமாய் வளர்த்து கல்வி பயிற்றியே தனம் பொருள் ஈட்டியே நிலபுலன்களை விஸ்தரித்து வீடு வாசல்-களை விருப்புடன் அமைத்து பிள்ளைகளின் உயர்ச்சியும் பெருமையும் கண்டு, பேரரைக் காண பெருமனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரரைக் காண பெருமனம் கொண்டு மூத்த மகனாம் ஜெகநாதனுக்கு புனித கண்டி மாநகரில் மஞ்சுளா மங்கையர்கரசியை (கப்பிட்டல் குரூப் ஒவ் கொம்பனி) அரும் துணைவியாக்கியே நிஷாந்தன், மொனிஷா, நிலுஷாவின் மழலைகள் கேட்டுமே, அரும் பெரும் மூத்த மகளாம் பட்டதாரி ஆசிரியை ஜெகசோதிக்கு மீசாலையாம்பதியில் கணபதிப்பிள்ளை - இராசகுலேந்திரனை (நகரசபை, சாவகச்சேரி) மனைக்கு நன் மகனாக மருமகனாக்கி மனமது மகிழ்ந்தார். மூன்றாம் மகனாம் ஜெகதீஸ்வரனுக்கு, சரசாலை வாழ் ஆசிரியர் வைரவிப்பிள்ளை மகள் சறோஜாவை மருமகளாக்கி பேர்த்தியாம் கார்திகாவின் அரும் பெரும் இசைமழலை கேட்டும் மகிழ்ந்தார் கடைசி மகளாம் தாரணிக்கு தன் சகோதரரின் மகனாம் மனோகரனை (ப.கூ.ச. உசன்) மருமகனாக்கி பேர்த்தி சர்மியுடன் மழலை பேசி மகிழ்ந்தார் சரஸ்வதி அம்மா.

நல்லஇலட்சியங்களையும் இன்பக் கலைகளிலும் ஈடுபாடு கொண்டவர், தங்கள் குலதெய்வமாகிய வேம்பிராய் விநாயகர், புதுக்குளத்து கண்ணகை, வயல்கரை முருகன் ஆகிய கோயில்களுக்குரிய ஆராதனை, உபநிடதங்களை மனம் தளராது செய்தவர் சரஸ்வதி அம்மா குடும்பவாழ்வில் எந்தகஷ்ரத்துக்கும் மனம் தளராது இறைவன் திருவடியே துணையென அடைக்கலம் புகுந்து, தெய்வ நம்பிக்கையோடு கடமைகளை செய்யும் பண்பு உடையவர் சரஸ்வதி அம்மா.

இவ்வாறாக வாழ்ந்த வேளை வந்த வாறெங்களே போமாறு அங்ஙனே என்ற நியதிப்படி நோயில் வாடாமல் நொந்து மனம் வாடாமல் பாயில் கிடவாமல், புண்ணியவதியின் ஆன்மா ஸ்ரீமுக வருட மாசி ஞாயிறு முதலாம் நாள் பூரட்டாதி நட்சத்திரத்திலும், திருதியை திதி அமைந்த பூர்வ பக்கத்தில் திடீரென ஓர் நொடிப் பொழுதில் அறுபத்தைந்து வயதில் ஆண்டவனின் திருவடிகளை சென்றடைந்தார்.

இவ்வாறு விசாலமான பண்புடையவராய் வாழ்ந்து எம் பெருமானடி நண்ணிய பெருமகளினது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல சிவனைப் பிராத்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் புலம்பல்

மண்ணுலகில் கண்கண்ட தெய்வம் என்று அம்மாவே
நீ இருந்தாய் எம் வாழ்வு தன்னில்
கண்இமை போல் காத்து வந்த தந்தை தானும்
கடிதேக உன்னுடனே பெருமை கண்டோம்.
நித்தமுமே ஈரிரண்டாம் மணி நேரத்தில்
நித்திரை விட்டெழுந்து எம் பணிகள் செய்து
எப்பொழுதும் எங்களுடன் மழலை பேசி
இப்பொழுது எங்குற்றீர் அம்மா நீதான்

அன்பினால் பெற்றெடுத்த அம்மா நாம் எங்கள்
கண்ணினால் காணாமல் கடமைகளோ செய்யாமல்
லண்டன், பிரான்ஸ், டென்மார்க், கனடா, இந்தியா
என்னும் நாடுகளில் இருந்தேங்கப் பறந்தாயோ

எம்முடைய அம்மாவே உன் இதயம் தன்னில்
மலர்ந்ததம்மா ஆறிரண்டு வாசப்பூக்கள்
பொன்னணிகள் காணி பூமி வீடு
வாசல் போனாலும் பொலிவு மிகு
உன்னுயிரைக் காக்க எண்ணி அன்னை நீ
எங்களுடன் இருப்பாய் என்று
அணி அணியாய் வைத்தியங்கள் மேற்கொண்டோமே
தென்னவனோ உமைப்பிரிக்க நினைத்த போது
துயரில்லா நித்திரை நீ செய்தாய் அம்மா

## மருமக்கள் புலம்பல்

மாசிலா அன்பு தந்த மாமி இங்கு உன் தனைப்போல்
நேசிக்கும் சிந்தையுள்ளார் நீ நிலத்தில் யாருமில்லை
நாம் பெற்ற பிள்ளைகளும் நாமும் அழுதழுது
தேடி அலைகின்றோம் உம் திருமுகம் காண மாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

அன்ன நடை போட்டு அப்பம்மா எம்மை எல்லாம்
அருகிருத்தி விதம் விதமாய் அமுதூட்டி
அணைத்திடுவாய் அன்பு மொழி கூறிடுவாய்
அங்கிங்கு ஓடாமல் அருமையாய் பார்த்திருந்த
அம்மம்மா நீ எங்கே போயினை நாம் ஆறுவோமோ.

## மைத்துனிமார் புலம்பல்

கூடிக்குலாவி குறு நகை தான் நீர் புரிந்து
தேடிய பதார்த்த மெல்லாம் தெளிவுடன் எமக்களித்து
கூடிய மதிக்கலை போல் பொலிவுமிகும் மச்சாள் நீர்
நாடியே சென்றனையோ நம்பனது அடி இணைகள்.

## சகோதரர் புலம்பல்

எமதருமை பாசமிகு சோதரியே நாமிருக்க
எமை எல்லாம் நினையாது ஏகினை நீ விண்ணுலகம்
எம்மனது புண்ணாகி எரியுதே துயர் மூடி
இன்னும் ஒரு முறை நாங்கள் காணுவது எவ்விடமோ.

## சுற்றத்தார் புலம்பல்

கோடிக்கணக்கில் உன் சுற்றத்தார் சூழ்ந்திருக்க
நாடி நாமெல்லாம் வந்து நிற்போம் உனைத்தேடி
மூடிப் பணிபுரிவாய் முதற் பொருள்கள் தானீவாய்
ஓடிப் பறந்தனையே சரஸ்வதி நாம் என்செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணபதி துணை

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

கஜானம் பூதகணாதி சேவிதம்
கபித்த ஐம்பு பலசாரபஷிதம்
உமாசுதம் சோக விநாசகாரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

## தேவாரம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே ஒரு நாளும் துன்பமில்லை
தாமார்க்கும்குடியல்லாத்தன்மை யான சங்கரநற்
சங்கவெண் குழையோர் காதிற், கோமார்கே
நாம் என்றும் மீளாஆளாக் கொய்மலர்
சேவடி இணையே குறுகினோமே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினை சுருக்கும்புழுத்தலைப்
புலையனேன் தனக்கு
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப்
பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே

## திருவிசைப்பா

நையாத மனத் தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்று முதல் இன்றுவரை,
கையாரத்தொழுது அருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடை திரைநோக்கிய சுந்தரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலிய சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊழும் உலகும் கழற உழறி உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவி யோகமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமமானசற் குணநேய
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தக ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு
சூரையம் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.

## பட்டினத்தார் பாடல்

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ் வதெல்லாம்
கேடுண்டெனும் படிகேட்டு விட்டோம் இனிக்கேள் மனமே
ஏடுண்டு கந்தையுண்டு உள்ளே எழுத்தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்டன் அடியார் நமக்குத் துணையுமுண்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அந்தாதி

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம் பூத்தாளை
மாதுளம் பூ நிறத்தாளை புவியடங்கக் காத்தாளை
அங்குச பாசாங்குசமும் கரும்பு மங்கை சேர்த்தாளை
முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே

## தேற்றம்

எத்தனையோ முடிமன்னர் எங்கே போனார்
இருந்தாரோ ராஜீவ்காந்தி உலகமாள
செத்தவர்கள் முன்செல்வார் சீவனுள்ளோர்
தினம் தினமும் சாகின்றார். இதுதான் உண்மை
வித்தியாசம் என்று உணர்ந்து கவலைநீக்கி
வீணான மனக்கவலை கட்டவேண்டும்
நித்திய வாழ்வுக்கு எமை நேர்படுத்தி
நிர்மலன் தாழ் சேர்வது தான் பிறவிநோக்கம்

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

(ஆசிரியை ஜெ-இராசகுலேந்திரன்)
தொகுப்பு : இசை மணி சி. கணேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இல்லறச்சோதி திருமதி சரஸ்வதி அருணாசலம் அவர்கள் சிவபதம் அடைந்த செய்தியைக் கேட்டு எமது துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும், மலர்வளையம் தந்துதவிய விடத்தற்பளை, கமலாசனி வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும், இவரது மரணச்சடங்கிலும், அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகளிலும், உள்ளன்புடனும் உணர்ச்சி மிகப்பேருதவி புரிந்த உற்றார், உறவினர், ஊரார், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும், ஆன்ம ஈடேற்றக்கிரியைகள் செய்த குருமார்களுக்கும், இம்மலரை சிறப்பாக வெளியிட உதவிய கொழும்பு அச்சகத்தார்களுக்கும், எங்கள் எல்லோரதும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்கனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

உசன்
விடத்தற்பளை
மிருசுவில்.
**15.03.1994**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY UNIE ARTS (PVT) LTD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org